**நாத்தான்டிய பிரதேச சபை**

**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நாத்தான்டிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

02 தொடக்கம் 25 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் காணப்படும் ரூபா 18,344,128 ஆன கடன்பட்டோருக்குரிய நிறுவனங்கள் அல்லது நபர்களடமிருந்து அறவிடுவதற்கு சபை எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்தவேண்டிய கணக்குகள்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 56,398,541 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளில் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாற்றமுராது காணப்படும் ரூபா 2,910,261 ஐ தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகளுடனான தொடர்பு | | | பெறுமதி (ரூபா) | இணங்காமை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| | (i) | 129(2)(அ)(ஊ) பிரிவுகள் | 15,509,039 | சபைக்குக் கிடைக்க வேண்டிய சகல வாடகைகளையும் முறையாக அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 136 ஆம் பிரிவு | - | சபை எல்லையில் அமைந்துள்ள சபைக்குரிய குத்தகைக்கு வழங்கப்பட்ட வாடகைக்கு வழங்கப்பட்ட சகல காணி மற்றும் கட்டிடங்களிலிருந்து குத்தகையாளர்களிடமிருந்து வீதவரி அல்லது ஏக்கர் வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | 158 ஆம் பிரிவு | 22,723,733- | சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி மற்றும் ஏக்கர் வரி கொடுப்பனவை தவிர்ப்பு செய்பவர்களுக்குரிய அசையாத சொத்துக்களை தடைசெய்து நிலுவை தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iv) | 159 (1)ஆம் பிரிவு | 258,524 | சபையினால் வாடகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்களுக்காக அறவிடப்பட வேண்டிய வாடகையினை அறவிட்டுக் கொள்வதற்காக அசையும் சொத்துக்களை ஈடாகப் பெற்று அடுத்த நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி | | |
| | (i) இலக்கம் 10(2 விதி | | ஒவ்வொரு செயற் திட்டத்தினையும் ஆரம்பிப்பதற்கும் முடிப்பதற்குமான எல்லைத் திகதிகளைக் குறிப்பிடுவதற்கும் அவ்வெல்லைத் திகதிகளுக்கமைவாக ஒவ்வொரு செயற்திட்டமும் செயற்படுவதை அவதானிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) இலக்கம் 33 விதி | - | வீத வரியினைச் செலுத்தத் தவறும் நபர்கள் தொடர்பிலான பட்டியலொன்று ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) இலக்கம் 213 விதி | | விநியோகித்தல் கட்டளை இன்றி நிர்மாணப் பிரிவுக்கான நிர்மாணப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன. |
| (இ) | 2015 மே 20 ஆந் திகதிய 2015/11 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | 698,650 | 2017 ஆம் ஆண்டிற்கான சீருடைக் கொடுப்பனவு சபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதும் சபையின் எந்தவொரு உத்தியோகத்தரோ அல்லது தொழிலாளியோ குறித்த சீருடையுடன் சேவையில் ஈடுபட்டிருக்கவில்லை. |

## 2. நிதி செயலாற்றல்

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 112,911,422 ஆக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 61,381,092 ஆக காணப்பட்டது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | **2017** | | | | **2016** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 20,941 | 16,679 | 16,012 | 22,037 | 21,052 | 14,421 | 19,513 | 20,022 |
| (ii) | வாடகை | 25,115 | 20,456 | 20,861 | 674 | 22,897 | 19,532 | 19,308 | 1,079 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 6,177 | 11,875 | 11,859 | 16 | 6,002 | 1,363 | 1,980 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 200,016 | 224,768 | 215,781 | 226,591 | 191,807 | 116,215 | 72,626 | 60,612 |

குறிப்பு * சேகரிக்கப்பட்ட வருமானத்தில் பட்டியலிடப்பட்ட வருமானத்தின் அறவீடுகள் மற்றும் நிலுவை வருமானத்தின் அறவீடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரிய அறவிடப்பட வேண்டிய வீதவரி மற்றும் குத்தகை வருமானத்தில் 16 சதவீதமும் வாடகை வருமானத்தில் 95 சதவீதமும் ஏனைய வருமானங்களில் 75 சதவீதமும் சேகரிக்கப்பட்டிருந்தன.

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீதவரி மற்றும் வரி ரூபா 16,678,867 இல் ஆண்டில் 57 சதவீதத்திற்குச் சமமனான ரூபா 9,469,016 மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையின் திரட்டிய நிலுவை வீதவரி மற்றும் வரி ரூபா 22,037,333 ஆக இருந்தமையால் வீதவரி சேகரிப்பு திருப்திகரமாக காணப்படவில்லை.

## 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 42,191,155 ஆன நீதிமன்ற தண்டப்பணமும் ரூபா 148,362,254 ஆன முத்திரைக் கட்டணங்களும் இருந்தன.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் போன்ற சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 13 விடயங்களுக்கு மாத்திரம் உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

சபையால் நிறைவேற்றப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) கடமைகளை நிறைவேற்றாமை

மீளாய்வாண்டிற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்றும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ரூபா. 158,316 பெறுமதியான இரண்டு நிர்மாண வேலைகள் ஆண்டின் இறுதி வரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டில் கட்டிட நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியில் 37 வீதம் மீதமாகக் காணப்பட்டது.

#### (ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நாளாந்தம் திரட்டப்படுகின்ற கழிவுகளில் அதிகமான பகுதி கொம்போஸ்ட் உற்பத்திப் பிரிவிற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் மாதாந்தம் சுமார் 883 கிலோ கொம்போஸ்ட் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. கொம்போஸ்ட் விற்பனையின் மூலம் வருடாந்தம் சுமார் ரூபா. 500,000 வருமானம் ஈட்டப்பட்டிருந்த அதேவேளை ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து சபையானது சூழல் நேய அடிப்படையில் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் கவனம் செலுத்தியிருந்தது.

#### (உ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

‘‘நிலைபேறான அபிவிருத்தி 2030 நிகழ்ச்சி நிரல்’’ இற்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்வதற்குரிய ஆரம்ப கட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அங்கு நமாடும் சேவைகளை நடாத்துதல், மனித வள முகாமைத்துவம், ஊழியர் நலன்புரி உட்பட சிறு வீதிகள் அபிவிருத்தி உட்பட

பொது உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக அக்கரை செலுத்தும் தரப்பினர் இனங்காணப்பட்டிருந்த போதிலும் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குறித்த செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக தேவையான நியதிகள் சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) 1994 இன் 03 ஆம் இலக்க முத்திரைக் கட்டணம் திருப்பும் சாசனத்தின் (வட மேல் மாகாண) இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சேர்க்கப்பட்ட வருடத்தின் திசம்பர் 31 ஆம் திகதி தொடக்கம் 05 வருட காலப்பகுதியினுள் சபையினால் கோரிக்கை விடுக்கப்படாமை காரணமாக 1991 ஆம் ஆண்டிலிருந்து 2010 ஆம் ஆண்டு வரை ரூபா. 14,970,932 பெறுமதியான முத்திரைக் கட்டணத்தினை சபை இழந்திருந்தது.

(ஆ) 2002 ஆம் ஆண்டில் மாட்டுப் பலியிடல் நிலையமொன்றினை நிர்மாணிப்பதற்கான ஒரு இடத்தினைக் கொள்வனவு செய்வதற்காக 04 நபர்களுக்குச் செலுத்தப்பட்ட முற்பணமாகிய ரூபா. 600,000 இனை அறவிட்டுக் கொள்வதற்கு 2018 மார்ச் 20 ஆம் திகதி வரை சபை எந்தவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(இ) வாராந்த சந்தையினை குத்தகைக்கு விடுவதற்கான வீத வரி மற்றும் வாடகையாக 2001 ஆம் ஆண்டிலிருந்து 2006 ஆம் ஆண்டு வரை 04 நபர்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா. 502,397 பெறுமதியான காசோலை மறுக்கப்பட்டிருந்ததுடன் அத் தொகையினை அறவிட்டுக் கொள்வதற்காக மீளாய்வாண்டின் இறுதி வரை சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 1980 திசம்பர் 31 ஆந் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சிப் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றுநிரூபத்தின் 02 ஆம் பந்திக்கமைவாக குறித்த நபர்களிடமிருந்து 5 வருடங்களுக்கு ஒரு முறை கடைகளுக்கான வாடகை மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதும் 2006 – 2012 வரையிலான காலப்பகுதியில் குத்தகைக்கு விடப்பட்டிருந்த சில கடைகளுக்காக 2008 ஆம் ஆண்டின் மதிப்பீட்டுப் பெறுமதி 2017 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்தது.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

---------------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியினர்**

------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணினர் 223 ஆக இருந்த போதிலும் 247 சேவையில் ஈடுபட்டிருந்த காரணத்தினால் 24 ஊழியர் மிகையாக இருந்தனர்.

(ஆ) நிறைவேற்றுப் பதவியணியினருக்குரிய செயலாளர் பதவி 08 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது.

### 3.4 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) மாரவில வியாபாரக் கட்டிடத் தொகுதியில் நாத்தாண்டிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பெறப்பட்ட ஒரு கடைக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாரவில மீச்சந்தை கட்டிடத் தொகுதியில் 12 கடைகளுக்காக 03 தொடக்கம் 08 மாதங்களுக்கு இடைப்பட்ட நிலுவையிலுள்ள கடைகளுக்கான ரூபா. 111,954 ஆன வாடகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க உள்ளூராட்சிப் பணிப்பாளர் ஆணையாளரின் சுற்றுநிரூபத்தின் 07 ஆவது பந்திக்கு மாற்றமாக ஹால்பன்வில வியாபாரக் கட்டிடத் தொகுதியில் ஒரு கடை சபையின் அனுமதியின்றி உப குத்தகைக்கு விடப்பட்டிருந்தது.

(ஈ) ஹால்பன்வில வியாபாரக் கட்டிடத் தொகுதியில் ஒரு கடையின் 2013 ஏப்ரல் தொடக்கம் 2016 யூன் வரையிலான காலப்பகுதிக்கான நிலுவைக் கடை வாடகையாகிய ரூபா. 36,960 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) 67 ஆம் விதிக்கமைவாக 2017 ஆம் கணிப்பீட்டின் போது இனங்காணப்பட்டிருந்த 14 தொழில்துறைகள் மற்றும் வியாபாரங்களுக்காக ரூபா. 25,800 கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

---

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 132 (ஐ) பிரிவின் பிரகாரம் பிரதேச சபை ஊழியர்களின் நலன்புரி அல்லது நோய்வாய்ப்படும் போது, கடன்பட்ட போது அல்லது இடர்களுக்கு முகங்கொடுத்த போது அவர்களுக்கு நிவாரணம் வழங்குதல் அல்லது உதவுவதற்காக நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட ஏதேனுமொரு நிதி அல்லது திட்டத்திற்காக தீர்மானிக்கப்படும் வரையறைகளுக்கு உட்பட்டதாக பிரதேச சபையினால் அனுமதிக்கப்படுகின்ற தொகையினைச் செலுத்த முடியும். சுபையினால் ஒவ்வொரு வருடமும் ரூபா 100,000 வீதம் இந் நலன்புரி நிதிக்காக வரவு வைக்கப்பட்டிருந்த போதும் மேற்குறிப்பிட்ட நோக்கம் அடையப்பெற்றிருக்கவில்லை.

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) சபைக்குச் சொந்தமான கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படுகின்ற மஹவெவ மீன் கடை, பன்றி இறைச்சிக் கடை மற்றும் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சிக் கடைகளிலிருந்து மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் அறவிடாது பொது விநியோகத்தின் மூலம் நீர் மற்றும் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி மீளாய்வாண்டிற்காக நீர்க் கட்டணம் ரூபா. 14,935 மற்றும் மின்சாரக் கட்டணம் ரூபா. 19,948 சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பலுவெல்கால மினீமிடிய குடியேற்றத்திற்கான பாதைக்கு தார் இடுவதற்கான வேலையின் வேலை நிறைவுப் பெறுமதியாகிய ரூபா. 826,977 இற்குப் பதிலாக ரூபா. 870,503 செலுத்தப்பட்டிருந்தமையினால் ரூபா. 43,526 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக மேலும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படாமை. |
| | (ii) கணனி உப பாகங்கள் பதிவேடு பேணப்படாமை |
| (ஆ) கடன்பட்டோர் | பழைய கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (இ) கடன்கொடுத்தோர் | பழைய கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) ஊழியர் கடன் | நிலுவையான ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (உ) பாதீடு | உரிய நேரத்தில் பாதீடொன்று தயாரிக்கப்படாமை |